(2) PROMULGATION OF PROHIBITORY ORDERS.

MR. SPEAKER: The hon. Member, Sri M. Kalyanasundaram has given notice of an adjournment motion. Now he can speak.

***திரு. மீ. கலியாணசுந்தரம் :** நான் மூன்று ஒத்திவைப்பு பிரேரணைகள் கொடுத்திருக்கிறேன். அதில் எதை முதலில் எடுத்துக் கொள்ளப் போகிறீர்கள்? எனது ஒத்திவைப்புப் பிரேரணையைத்தான் முதலில் எடுத்துக் கொண்டிருக்கவேண்டும்.

கனம் சபாநாயகர் : எதை எடுத்தாலும் ஒன்றுதான்.

SRI M. KALYANASUNDARAM: Sir, to promulgate an order under Section 144, Criminal Procedure Code and taking recourse under the Madras City Police Act is not an ordinary administration of law. I understand that in any particular locality if there is any disturbance, it is for the Police to take action. In a sweep, almost all over the State, orders under Section 144, Criminal Procedure Code have been promulgated. So, it naturally prevents the parties, which are opposed to the burning of the Constitution, to hold meetings and processions in any parts of the State. We are not able to explain the problem in a proper perspective to the people.

It is undemocratic. Therefore, I request the Government to withdraw the promulgation of Section 144, except where it is absolutely necessary. In order to discuss the matter, I want to move that adjournment motion. I think it is pertinent and request you to allow it, Sir.

***கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, நான் முன்பு கூறியதுபோல் நிலைமை எவ்வாறெல்லாம் ஏற்படுகிறதோ, மாறுகிறதோ அதற்கேற்றவாறு போலீசார் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வது அவர்களது கடமையும் பொறுப்புமாகும். 144 புதிதல்ல. அது பழமையானதொன்று. அன்றாடம் 144 பிரயோகிப்பதில்லை. அவசரமான நிலைமை ஏற்படுகிறபோதுதான் அதைப் பிரயோகிக்கிறார்கள், அல்லது வேறு தடைச் சட்டத்தைப் பிரயோகிக்கிறார்கள். ஊரில் ஒரு அமளி ஏற்பட்டு அதைத் தடுப்பதற்கு, மக்களைப் பாதுகாப்பதற்கு இம்மாதிரி ஒரு தடை உத்தரவு போட்டால் மற்றவர்களும் பாதிக்கப்படுகிறார்கள். அதற்கு என்ன செய்வது? யார் அமளிக்கு காரணமோ அவர்கள்தான் அதற்கு பொறுப்பே தவிர மக்களை பாதுகாக்க வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் சட்டங்கள் பிரயோகிக்கப்படுகின்றன. நேற்று முன் தினம் நான் கூட உடுமலைப்பேட்டையில் பேசுவதாக இருந்தேன். இந்தத் தடை உத்தரவால் அது ரத்து செய்யப்பட்டது. நான் பேச முடியவில்லை. இதெல்லாம் தவிர்க்க முடியாதது. ஆக, கனம் அங்கத்தினரின் பிரேரணை அவசரப் பிரேரணைக்கு உரியதல்ல என்று தாழ்மையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER: I withhold consent, as there is no material for admitting it as an adjournment motion.